# திராவிடநாடு

1-12-57 | வார வெளியீடு | விலை 16 காசு


## தேவை இல்லை


[ இரா. வெங்கடபதி ]


இமயம்போல் பீடுயர்ந்த தமிழ் இருக்க—இந்தி
இட்டபொடி மணற்குன்று தேவை இல்லை
இமைமூடா ஒளிக்கண்கள் தமிழ் இருக்க—இந்தி
இடர்செய்யும் ரணப்புண்கள் தேவை இல்லை
சமைத்திட்ட நல்விருந்து தமிழ் இருக்க—இந்தி
சதிசெய்யும் கொல்மருந்து தேவை இல்லை
எமைவளர்க்கும் பூஞ்சோலை தமிழ் இருக்க—இந்தி
எமையடைக்கும் சிறைச்சாலை தேவை இல்லை.

மணம்கொழிக்கும் பூக்காடு தமிழ் இருக்க—இந்தி
மிகவருத்தும் முட்காடு தேவை இல்லை.
தணலாற்றும் தென்காற்று தமிழ் இருக்க—இந்தி
தகிக்கின்ற தீக்காற்று தேவை இல்லை
குணமார்ந்த பெருவாழ்வு தமிழ் இருக்க—இந்தி
குறைநேர்ந்த சிறுவாழ்வு தேவை இல்லை
கணமேனும் சுவைகுன்றாத் தமிழ் இருக்க—இந்தி
கசக்கின்ற எட்டிக்காய் தேவை இல்லை.

மலரல்லிக் குளிர்ப்பொய்கை தமிழ் இருக்க—இந்தி
மணம்கெட்ட வெறுங்குட்டை தேவை இல்லை
புலர்காலை இளங்கதிராம் தமிழ் இருக்க—இந்தி
புலையிருட்டுப் பெரும்'பூதம்' தேவை இல்லை
நலஞ்சார்ந்த கலைப்பேறு தமிழ் இருக்க—இந்தி
நலிவூட்டும் கொலைக்கருவி தேவை இல்லை
பலம்வாய்ந்த தோளெங்கள் தமிழ் இருக்க—இந்தி
பதைக்கவிடும் தேள்கொடுக்கு தேவை இல்லை.

# கேட்டீரா! சேதி!

பஞ்சாப் மாகாண சர்க்கார் ஒரு நல்ல முடிவு செய்திருக்கிறார்கள். 12-வயதுக்குட்பட்ட சின்னஞ்சிறு மாணவர்கள், பள்ளிக்குச் செல்லும்போதும், திரும்பும்போதும் பஸ்களில் ஏற்றிக்கொண்டுபோவது என்பதுதான் அம்முடிவு. அரசினருக்குச் சொந்தமான பஸ்கள் ஓடுகிற நகரங்கள், கிராமங்கள் முதலியவைகளில் இம்முறை அமுலாக்கப்படும், பஸ் போக்குவரத்தில் பெரும்பாகம் அரசின் மேற்பார்வையிலிருப்பதால், உடனடியாக இந்த உத்தரவை அமுலுக்குக் கொண்டுவருமாறு, எல்லா அதிகாரிகளுக்கும் சென்ற கிழமை தாக்கீது அனுப்பியிருக்கிறார்கள்.

*

தமிழ்ப் பெண் ஒருவர் தென்னாப்பிரிக்காவில் வக்கீலாகியிருக்கிறார்! பனமத்தி முத்து கிருஷ்ணா எனும் பெயர் கொண்ட இப்பெண், சுப்ரீம் கோர்ட்டின் நேட்டால் மாகாண டிவிஷனில் வக்கீலாகப் பதிவு செய்து கொண்டிருக்கிறார். இப்படியொரு பதவிக்கு, ஒரு தமிழ்ப் பெண் முன் வருவது, இது தான் முதல் தடவையாம். இவருடைய பாட்டனார், நேட்டால் சுப்ரீம் கோர்ட்டில் தமிழ்மொழி பெயர்ப்பாளராக இருந்தாராம். நேட்டாலில் குடியேறிய பழைய குடும்பங்களில் ஒன்றும் இப்பெண்மணியின் குடும்பம்.

*

பறவைகளையும், மிருகங்களையும் வளர்ப்பதில் உலகிலேயே தான் தலைமை வகிப்பதாகப் பிரிட்டன் சொல்லிக்கொள்கிறது. அண்மையில் கிடைத்த ஒரு விபரத்தைப் பார்க்கும்போது அது உண்மைதான் என்றும் தெரிகிறது. பிரிட்டனிலுள்ள 150-லட்சம் குடும்பங்களில் முக்கால்வாசிப்பேர் நாய், பூனை, பறவை ஆகியவற்றைப் பிரியமாக வளர்க்கின்றனராம். இதற்காக ஆண்டு ஒன்றுக்கு மொத்தம் ஐந்துகோடி பவுன் செலவழிகிறதாம்! கம்பெனிகளால் தயாரிக்கப்படுகிற நாய் பூனை உணவுகள் மட்டும் ஒரு கோடி பவுனுக்குமேல் விற்பனையாகிறதாம்!!

*

"அவன் என்னப்பா! இருதயத்தை விற்றுவிட்டானா?," என்று கேட்கிறோமல்லவா? இது இனி, உண்மையாகிவிட்டாலும், விடலாம்.

உங்கள் உடலில் இருக்கிற இருதயத்தை எடுத்தெறிந்துவிட்டு புதிய இருதயத்தைப் பொருத்திவிடலாம் என்று ஆஸ்திரேலியாவிலுள்ள புகழ் பெற்ற இருதய டாக்டர் சர். ரசல் பிராக் என்பவர் தெரிவிக்கிறார். 'நல்ல' இருதயத்துடன் ஒருவர் இறந்துபோனால் அந்த இருதயத்தை எடுத்து பலவீனமான இருதயம் உடையவருக்கு மாற்றி வைக்கலாம் என்று அந்த டாக்டர் தெரிவித்துள்ளார். அடுத்த ஆண்டு, இப்படியொரு சோதனையை, இவர் செய்யத் திட்டமிட்டுள்ளாராம்.

*

காந்தியடிகளுக்கு 'கவுரவம்' தேட சட்டம் ஒன்று பிறப்பித்து, தனக்கிருக்கும் ஆர்வத்தைக்காட்டிக்கொண்டதல்லவா இங்குள்ள காங்கிரசாட்சி? இதோ, ஒரு செய்தி. புதுக்கோட்டையிலுள்ள 'ஹோல்ஸ் வொர்த் பார்க்' என்பதை "காந்தி பூங்கா," என்று பெயர் மாற்றி வைக்கவேண்டுமென ஒரு எதிர்க்கட்சி கவுன்சிலர் தீர்மானம் ஒன்று கொண்டுவந்தார். இத் தீர்மானத்தை எதிர்த்து 8 பேர் ஓட்டளித்தார்களாம். காந்தியடிகளின்பெயரை ஒரு பூங்காவுக்கு வைப்பதை எதிர்த்து ஓட்டளித்த இவர்கள் யார் தெரியுமா? காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களாம்! திகைக்காதீர்கள் — நடந்திருக்கிறது!!

*

தேனீக்கள் என்றால், மிகவும் சாமான்யமாகக் கருதுகிறோம், நாம். ஒரு சமயத்தில், அவை, போர்களில் கூடப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இங்கிலாந்தில் ஆண்ட முதலாம் ஹென்றியை (1100-1135) பிரெஞ்சு நாட்டரசனொருவன் முற்றுகையிட்டபோது, எதிரிப்படைகளின்மீது தேன் கூடுகளை எறிந்தனராம். தேனீக்களுக்குப் பயந்து குழப்பமடைந்த படை முற்றுகையைக் கைவிட்டது. முதலாம் ரிச்சர்ட் எனும் அரசனும் இதுபோல பகைவர் மீது, தேன் கூடுகளை எறிந்து குழப்பமுண்டாக்கி அவர்கள் கோட்டையைப் பிடித்தானாம். முதலுலகப்போரில் கிழக்காபிரிகாவிலிருந்த ஜெர்மன் படை போரில் தேனீக்களைப் பயன்படுத்தியதாகச் சொல்லப்படுகிறது.

*

டில்லியில் இப்போது ஏதாவது ஒரு சர்வதேச மாநாடு நடந்துகொண்டேயிருக்கிறது! வரும் டிசம்பர் 2ந் தேதி, காமன்வெல்த் மாநாடு, டில்லியில்கூட இருக்கிறது. இம்மாநாட்டைக் கூட்டும் பொறுப்பையும் செலவையும், இந்தியா-பாகிஸ்தான்-இலங்கை இம்மூன்றும் ஏற்றுக்கொண்டுள்ளன. ஒரு வாரம் நடைபெறப்போகும் இம்மாநாட்டில், காமன்வெல்த் நாடுகளின் பார்லிமெண்டுப் பிரதிநிதிகள் 100 பேருக்கு மேல் கூடப் போகிறார்கள்.

★

# விரைவில்.....?

மலர் 16] ஆண்டு சந்தா ரூ. 8 [1—12—57] தனிப் பிரதி 16-காசு [இதழ் 20


இந்தி குறித்து, நேரு அவர்கள், சமரச முரசம் தட்டுகிறார்! எனினும் காரியங்கள், எதுவும் தங்கு தடையின்றி நடைபெற்றுக்கொண்டேயிருக்கின்றன!!

இந்தியைக் கட்டாயமாக்குவதில் அவசரம் கூடாது—எல்லோருடைய கருத்துக்களையும் அறிந்தே போகவேண்டும்—என்று அன்பொழுகப் பேசுகிறார், நேரு.

ஆனால், இதோ காங்கிரஸ் பொதுச் செயலாளர் நாராயணன் அறிவிக்கிறார், "இந்தி, இப்போது இந்தியாவின் ஆட்சி மொழியாகிவிட்டதே!" என்று. டில்லியில் நடைபெறும் சர்வதேச அரங்குகளிலெல்லாம் பிரதமர் நேரு இந்தியில்தான் பேசுகிறாராம்! இந்திய சீனப் பிரதமர்களோ, இந்திய யுகோ குடியரசுத் தலைவர்களோ வெளியிடும் கூட்டு அறிக்கைகள் யாவும் இந்தியில்தான் வெளியிடப்படுகின்றனவாம்! வெளிநாடுகளில் இந்தியத் தூதர்களும் தங்களின் பதவி நியமனப் பத்திரங்களை இந்தியில்தான் தெரிவிக்கின்றனராம்!!

ஒரு பக்கம், இந்தியை அவசரமாகத் திணிக்கமாட்டோம் என்று அன்பு ததும்பப் பேசுகிறார்கள்· அதுபற்றிப் பரிசீலிக்க ஆட்சி மொழிக்குழு அமைத்துள்ளோம்—பார்லிமெண்டரி கமிட்டி விவாதித்துக் கொண்டிருக்கிறது—என்று விளக்கம் தருகிறார்கள்.

ஆனால், செயலோ, நேர் எதிர்மாறாகயிருக்கிறது! அன்புச் சொல்லும் அரவணைப்பும் வழங்கிக்கொண்டிருக்கும்போதே, மறைமுகமாக எல்லாத் துறையிலும் இந்தியை நுழைக்கும் காரியம் சாதுரியமாகச் செய்யப்பட்டே வருகிறது!!

இந்தி வேண்டாம்—என்று, நாம்மட்டுமல்ல, காங்கிரசினரில் கூட நிலைமையுணர்ந்தவர்கள் தெரிவிக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

"சரி! வேண்டாம்?" என்று சொல்லிக் கொண்டே, டில்லி, எல்லாத் துறையிலும், இந்தியைப் புகுத்திக் கொண்டே வருகிறது. அந்த ஆணவத்தால்தான் காங்கிரஸ் பொதுச் செயலாளரே, கேலியோடு பேசுகிறார் இந்தி, "இப்போதே ஆட்சிமொழியாகத்தானே இயங்குகிறது" என்று!!

அவர் சொல், வேலாகப் பாய்கிறது, நமக்கு. டில்லியின் சூதுமதியும் விளங்குகிறது, தெளிவாக.

**இந்தி, எத்துறையிலும், நுழையாது!—எனும் உறுதி மொழியை, டில்லியிடமிருந்து, பெறுதல் வேண்டும். அப்போதுதான், டில்லியினர், இதுபோன்ற தந்திரங்களில் ஈடுபடமாட்டார்கள். உள்நாட்டிலேயே, இந்தி கட்டாயமில்லை என்று சொல்லிக்கொண்டே கார்டையும் கவரையும் இந்தி, ஆக்கிவிட்டனரே!!**

டில்லியினர், நமது கோரிக்கைகளுக்கு, செவி மடுப்பரா?—எனில், நமக்குச் சந்தேகம்தான். எவ்வளவுதான், இங்குள்ள காங்கிரசினர், ஓடியும் வலியுறுத்தியும், கெஞ்சியும் கொஞ்சியும் பார்த்தாலும், டில்லி மிரட்டி அதட்டினால், 'சரிங்க' என்று வந்துவிடுவதைப் பல முறை பார்த்திருக்கிறோம். இந்தி விஷயத்திலும், காமராசர் அரசு, அப்படி நடந்து கொள்ளப்போகிறதா என்பதை நாடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

இந்தி, ஒரு தீராத தலைவலியாகவேயிருந்து வருகிறது. அது அரசுக்கட்டிலில் அமர்த்தப்படாது என்கிற உறுதி மொழி, தெளிவாகக் கிடைக்கவேண்டும்—இண்டு இடுக்குகள் மூலமும் அது புகுத்தப்படாது என்கிற உறுதி மொழியும் பெற்றாக வேண்டும்.

ஒரு பக்கம் தலைவர்கள் உறுதிமொழியளிப்பதும்' இன்னொரு பக்கம் காங்கிரஸ் பொதுச் செயலாளர் போன்றோர் இப்படிப் பேசுவதும், நமது அச்சத்தையும் ஐயத்தையும் அதிகமாக்கியே வருகிறது.

தாய் மொழிக்காக, தமிழ்நாடு, சிறைக்குள் நுழைந்தது!—எனும் கட்டம், விரைவில் ஏற்பட்டாலும் ஏற்படலாம். எவ்வளவோ எடுத்துச்சொல்லியும் வற்புறுத்தியும், டில்லிபீடம், தனது எதேச்சாதிகாரத்தையும் சாணக்கியப் புத்தியினையுமே பயன்படுத்துமென்றால், "தமிழர்காள்! தமிழ்நாட்டு மக்காள்! தயா

ராகுங்கள்!" என்று முரசொலிப்பதைத் தவிர வேறு மார்க்கமில்லை.

மேகங்கள் விலகுமென்கிற அறிகுறி தெரியவில்லை! அதற்கான உறுதி மொழியும், நடவடிக்கைகளும் 'இல்லை' யென்றால் 'மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை' எனும் கீதத்தைப் பாடிக்கொண்டு, அணிவகுத்துக்கொண்டு, அறப்போரிலீடுபட, தாயகமே' தயாராயிரு! தயாராயிரு!!

★

# அந்த மனநிலை

இன்னும் ஒரு விபத்து.

இம்முறை, வடக்கே, நடந்தது.

கல்கத்தா மெயில் கவிழ்ந்து, ஒன்பது பேருக்கு மேல், பிணமாயினராம். நூறு பேருக்கு மேல் காயமாம்.

விபத்தின் அளவைப் படத்தில் பார்க்கிறபோது பயங்கரமாயுள்ளது; எனினும் ஒன்பது பேர்தான் மாண்டதாகச் சர்க்கார் அறிவிக்கிறது!!

உலகத்தில் இப்படி விபத்துக்கள் ஏற்படுவதற்கு 'பரிசு' கொடுப்பதென்றால், இந்திய உபகண்டத்துக்கு, போட்டியே இருக்காது. அவ்வளவு விபத்துக்கள்! பல சாவுகள் அடிக்கடி!!

கவிழ்ந்தது கல்கத்தா மெயில், பலர் மாண்டனர் எனும் செய்தி கண்டதும், பதறினோம். கொடுமைக்கு மக்கள் ஆட்பட்டனரெனின், எவருக்கும், துக்கம் வந்து மோதத்தானே செய்யும்?

காங்கிரசாட்சியில், எந்தப் பாதுகாப்புமே இன்னும் கொஞ்ச நாட்களில் மக்களுக்கு, இல்லாது போய்விடும் போலிருக்கிறது!!

இந்த விபத்துக்கு, இயற்கையைக் குற்றம் சாட்டுவதற்கில்லை. அதனால், 'நாசவேலை' என்று நம்புகிறார், இரயில்வே மந்திரி.

இயற்கையையும் மீறுகிறான் மனிதன், இப்போது! இரயில்வே பாதுகாப்பிலாகாவையும், அதற்கென பல அதிகாரிகளையும் வைத்திருக்கும் சர்க்காரால், பிரயாணிகளுக்குப் பாதுகாப்பு உண்டாக்க இயலவில்லை எனில், கேலிக்கும் பரிதாபத்துக்கும் உரியதே!!

"பல்லாயிரக் கணக்கான மைல்களுக்கு இந்தியாவில் இரயில் பாதை இருக்கிறது. இவையெல்லாம் எப்படி விழிமூடாது, கவனிக்கமுடியும்?," என்கிறார் இரயில்வே மந்திரி. பதில், திருப்திகரமாகத் தெரியக்கூடும். இப்படி அடிக்கடி விபத்துக்கள் நேரவேண்டுமென்று, டில்லி அமைச்சர் விரும்புகிறார், என்று குற்றம் சுமத்தும் குணங்கெட்டவர்களல்ல, நாம்.

ஆனால் ஒன்று! இந்திய உபகண்டத்தில் நாற்பது கோடி மக்களிருக்கிறார்களே, அவர்கள் ஒவ்வொருவருக்கும், உணவும் உடையும் பாதுகாப்பும் அளிக்கவா முடியும்?—என்று சொல்லமுடியாது அரசால். அரசு இருப்பதே, இதற்காகத்தான், ஆகவே, எத்தனை மைல் தூரம் இரயில் பாதை இருந்தாலும், அது பத்திரமாக இருக்கிறதா என்று பாதுகாப்பு அளிக்கவேண்டியது நிர்வாகத்தின் பொறுப்பாகும்!!

இது, சாத்தியமற்றது என்று இந்த விஞ்ஞான காலத்தில் கூறிவிட முடியாது. எனவே, விபத்துக்கள் ஒவ்வொன்றும், அரசுக்குப் படிப்பினையாகி, மக்களின் பாதுகாப்புக்கான நடவடிக்கைகளை எடுக்கத் தூண்டவேண்டும்.

இந்த விபத்து, அரசுக்கு, படிப்பினையாகப் படுகிறதோ இல்லையோ, நமக்கு ஒரு 'படிப்பினை'யை மீண்டும் அளிக்கிறது! ஆம், அடிக்கடி, வடக்கு பற்றி நாம் சொல்லிவரும் குற்றச்சாட்டுக்கு, வலிவு தரும் படிப்பினை இது!!

9 பேர் மாண்டனராம், இந்த விபத்தில். ஓடோடியும் சென்றிருக்கிறார், டில்லி மந்திரி ஜகஜீவன்ராம். நற்பண்பு என்போம், இதனை.

கடந்த ஆண்டு இதே நாளில் (23—11—56 அன்றே) நிகழ்ந்ததுதான், அரியலூர் விபத்து. அப்போது 150 பேருக்குமேல் மாண்டார்கள், மக்கள். பறந்துவந்து 'பார்த்துவிட்டுப் போகும் பண்பு ஏற்பட்டதோ, டில்லி அமைச்சருக்கு?

இதிலும் வடக்கு, தெற்கா!!—எனக்கூடும் காங்கிரஸ் அன்பர்கள்.

சம்பவம் செப்புகிறதே, பதில் என்ன தருவீர்—எனக் கேட்கிறோம், நாம்.

வடக்கு! தெற்கு!!—எனும் வேற்றுமை, இந்த ஒரு விஷயத்திலா? புயலும் வெள்ளமும், வடக்கே ஏற்பட்டால் ஓடோடும் டில்லி! தெற்கே ஏற்பட்டால், 'அது அந்த ராஜ்யத்து விஷயம்,' என்று பதில் தரும்—கேட்டால்!!

ஒற்றுமை, என்பது உதட்டுச் சொல் அல்ல; பேச்சால் ஏற்பட்டுவிட முடியாது. தானாடா விட்டாலும் சதையாடும் குணம் இயற்கையாகவே ஏற்பட வேண்டும். எவ்வளவுதான் நேருபிரான், ஒற்றுமையைப் பற்றி முழக்கினாலும், தெற்கு தெற்குதான், வடக்குதான்.

(13-ம் பக்கம் பார்க்க)

நேரில் ஆங்கிலம் கற்றுக்கொடுப்பதற்காக அமைந்த தனிப்பெருங் கல்வி அரங்கம்:

# The School of English Learning

# ஆங்கிலக் கல்வி நிலையம்

60, பிராட்வே--மண்ணடி--சென்னை-1

## தமிழ்

எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்

## ஒரே வருடத்தில்

இலக்கண ரீதியாக

## இங்கிலீஷ் திருத்தமாக நேரில் கற்கலாம்

சென்ற டிசம்பர் மாதம் ஆரம்பமாகிய இங்கிலீஷ் வகுப்புகள் இந்த வருட டிசம்பரில் முடிவடைகின்றன.

**புதிய வகுப்புகள்**

**டிசம்பர் 10-தேதி**

ஆரம்பமாகின்றன.

வகுப்பில் சேர விண்ணப்பம் செய்துகொள்ள

**கடைசி தேதி: 9-12-1957**

இலக்கண ரீதியாக இங்கிலீஷில் பேசவும், சொந்தமாகக் கட்டுரைகள், கடிதங்கள் எழுதவும் அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும். காலையிலோ மாலையிலோ வசதியான நேரத்தில் வகுப்பிற்கு வந்து ஒரு மணி நேரம் படித்தால் போதுமானது.

முழு விபரங்களை நேரில் வந்து தெரிந்துகொள்க.

---

**முக்கிய அறிவிப்பு:-** 16 வயதிற்கு மேற்பட்டவர்களே இவ்வகுப்புகளில் சேரலாம். பெண்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள். சென்னையில் உள்ளவர்கள் மட்டுமே நேரில் விண்ணப்பிக்கவும்.

---

**ஓரளவு** இங்கிலீஷ் தெரிந்தவர்களும் இங்கு நடைபெறும் வகுப்புகளில் சேர்ந்து திருத்தமாகக் கற்றுப் பயனடையலாம்.

அடிவானில் விடிவெள்ளி முளைக்கின்ற வேளை; இரு தோள்களையும் வலுவாக்கி உறைவாளின் கூர்பார்த்தான் — வரும் பகையைக் கிழிக்கின்ற புலிக்குணத்துக் காளை!

புதுநிலவாம் அவன் மனைவி, எழில் பொங்கி நிற்கும் பருவத்துக் கிள்ளை; ஆம் — கிளிதான் அவள் பெயர். பூமியிலே அப்பேரழகு மழலையாய் உதித்தபோது அதன் உதட்டினிலே தேங்கி நின்ற சிவப்பைக் கண்டு பெற்றவர்கள் அப் பெண்வடிவுக்கு இட்ட பெயர் கிளி யாகும்!

பொல்லாத பகை மேகம் இவன் எல்லை மிதிக்க—போர் அலைகள் காளையரின் உருவினிலே, அலை அலையாய்—மலையெனவே திரண்டு விட்டதாலே — கிளம்பினான் "கிளியே! விடை கொடு! கிழித்து மீள்கிறேன் பகைக் குலத்தை!" என்கின்ற உறுமலோடு.

உள்ளமெலாம் 'அவன்' உருவை நிறுத்திவிட்ட அக்கிளியும், புலிபோல — புகை நெருப்பு வீசுகின்ற மலைபோல — போர்க்கோலம் பூண்டுவிட்ட கண்ணாளன் நிலைகண்டாள்; அவள் நீலவிழிக் கூட்டினிலே நீர்முத்துக்கள் அரும்பு காட்டி நின்றன.

"போடா மகனே போருக்கு" என்றிடும் தமிழ்க் குணம் உண்டு அவளிடம், ஆனால் துடிக்கும் இதழுக்கும் துவளுகின்ற இடையினுக்கும் யார் பதில் சொல்லுவது?

கண்ணில் நீர் பெருக—கட்டழகு சோர்வடைய--"என்ன அத்தான்! போய் வந்த களைப்பு இன்னும் தீரவில்லை; போர் தந்த வடு இன்னும் ஆறவில்லை; யார் அத்தான், இதற்குள்ளே முரசறைந்துவிட்டார்கள்—இரணகளத்தில் பிண மலையைக் குவிப்பதற்கு! காவல் மரம் வெட்டினரோ? உம் காவலனை ஏசினரோ? தூசிப்புகையாக உம் காலடியில் தோய்ந்துவிட மோதிக்கொண்ட அப்பகைக் கூட்டம் எதுவோ? பல்லவரா—பாண்டியரா—பழிக்கஞ்சாச்சாளுக்கியரா—யார் அத்தான் கூறுங்கள்!"

வடிவழகி கேட்டாள் வழிகின்ற விழிகளோடு.

"விலைகொடுத்து வாங்கிவிட்டான், தமிழ் இனத்துப் பகையனை!"

"யார் அத்தான்!"

"கலிங்கத்தான்"

"கலிங்கத்தானா......"

"ஆம் கண்ணே! கருணாகரத் தொண்டைமானையே 'களம்வா' என்றானாம்; பாரேன் நீயும்—இனி மிச்சம் இருக்கவா போகிறது அவன் உடலில் எலும்புக் கூட்டம்!"

கிளியைச் சேர்த்தணைத்தான், சந்தன மேனியில் முகம் புதைத்தான், சங்கு நிகர் கழுத்திலே இதழ் பதித்தான் 'இச்' சென்ற ஒலி பிறந்தது, வீரன் பறந்தான்.

கிளியின் வடிவேல் விழி இரண்டும் ஒருமுறை சுழன்றன.

* * *

இதற்குள்ளே வீதிக்கு வீதி போர்ப்பாட்டு! வீட்டுக்கு ஒரு மகனை நாட்டுக்கு எனத்தந்த தாய்க்குலமும் — தமிழ்க் குடியும் விடுதலைச் சேனைக்கு வாழ்த்துக் கூறின.

பல துளி பெருவெள்ளமாகி ஊர் எல்லையிலே பெருங்கடலாய் ஆர்ப்பரித்து நின்றது—பகைவர்களின் தளபதியாம் எங்கராயன் எங்கே என்ற முழக்கத்தோடு!!

வெள்ளத்தோடு ஒரு வெள்ளமாய் — வீரனும் வாளோடு நுழைந்துவிட்டான்,

படை சென்ற பாதையெல்லாம் ஏற்பட்ட தூசிப்படலம் விழியடைக்கும்—வாய் அடைக்கும்—ஆனாலும் அணிவகுப்பின் கூச்சல் மட்டும் அடங்கவில்லை கலிங்கத்தான் தலைவாயில் மிதிக்கும்வரை.

இரு படைகளும் மோதிக் கொண்டனவாம்!

**செயம்கொண்டார்** சித்தரிப்பது போல் சொல்வதென்றால்--நம்மையெல்லாம் கிலி பிடிக்கும், ஆம்! குலை நடுக்கம் கொள்ளுகின்ற பயங்கரமான போர்க் கூத்தாம் அது!

"தலை பத்தும் சிந்தினாலும் இலை உனக்கு சீதை!" என்றானுமே தென்னிலங்கைக் கோமான் — அதுபோலக் கொதித்தானாம் 'தொண்டைமான்' விருது பெற்ற கருணாகரன்.

தளபதியின் வலக்கரமாய் கிளிமொழியின் அத்தானும் பிண நாற்று நட்டான்; களமெல்லாம்! கைபட்ட பகையெல்லாம்!!

போர் உச்சக்கட்டம் அடைந்தது.

**"எடும் எடும் எடுமென எடுத்ததோர்;**
**இகலொலி கடலொலி இகக்கவே;**
**விடுவிடுவிடுபரி கரிக் குழாம்"**

மனிதப் புழுக்களைத் துவைத்துச் சாறெடுத்ததாம்.

**"குருதியினதி வெளி பரக்கவே**
**குடையென நுரையென மிதக்கவே**
**கரிதுளி படமுட லடுக்கிலே**
**கரையென விடுபுடை கிடக்கவே."**

அம்மவோ! எவ்வளவு பயங்கரம்! பிணப் புயல்—இரத்தச் சாரல்.

ஊற்றெடுத்த குருதி வெள்ளத்திற்கு--மிதக்கின்ற மனிதச்சக்கைகள் கரை கட்டின!!

எங்கிருந்தோ ஒரு வேல் — வீரனின் விலாவிற்கு குறிவைத்து

வந்தது. அப்பொழுதுதான் தன் இருதயத்திலே சொருகிக் கொண்டிருந்த மறு வேலை எடுத்துப் பாய வந்த யானை யொன்றின் விழியிரண்டைப் பிடுங்கி நின்றான்.

வருகின்ற வேலுக்கு என்ன செய்வான். உடலதனைச் சற்றே தாழ்த்தினான். அந்தோ! சீறிவந்த வேல் வீரனின் காலொன்றை அறுத்தெறிந்து விட்டுப் போயிற்று. அதேசமயம் அண்டம் தடம் புரண்டதுபோல் அதைத் தொடர்ந்து ஓர் யானை அவனை மிதிக்க — கொக்கரித்து வந்தது. சுற்றுமுற்றும் பார்த்தான் வீரன். உடைந்த ஒரு வேலாவது கிடைக்குமாவென்று! ஐயோ இல்லை!

"தமிழன் செத்தாலும் பாய வரும் பகையதனின் உயிர் குடித்தே சாவான் காண்பாய்!" எனச் சொன்னான். கிழித்தெடுத்தான் அறுபட்ட காலொன்றை, சுழற்றி விட்டான், அவ்வீரத் திருமகன். அங்கேயே சோர்ந்தும் வீழ்ந்தான்.

மோதவந்த மதயானையும் — மலைபோல, மாமல்லபுரத்துச் சிலையாகி நின்றது; அத் தமிழ்மகனின் வீரச் சாவுகண்டு!

* * *

களம் சென்ற காதலனை எதிர் பார்த்து, தெருத் திண்ணையின் கம்பத்தைப் பற்றியபடி கிளி காத்திருந்தாள்.

மண்ணோடு மோதிக்கொண்டதால் அந்திவானத்தின் முகம் கூடச் சிவந்துவிட்டது.

களம் சென்று பகை முடித்த வீரரில் சிலர் திரும்பி வந்து கொண்டிருந்தனர்.

வந்த ஒருவனைப் பார்த்து கிளி கேட்டாள் "வீரனே! எங்கே என் அத்தான்!"

"களம் சென்ற உன் அத்தான்-களத்திலேயே செத்தான்; வீரச் சாவுதானம்மா — விழி நீரைத் துடைத்துக்கொள்!" அதற்கு மேல் அவன் அங்கு நிற்கவில்லை— அவளும்தான்.

களம் நோக்கிச் சென்றாளாம் அக்கனிக்கொடி! அங்கே கண்டாளாம்; அங்கம் ஒரு திசையாக அறுபட்டு மிதிபட்டு ஆலைவாய் சிக்கிவிட்ட கரும்பதனின் உடல் போல—கீழே கிடந்த தன் காதலனை!

"கிளியே! என்ற வாய் எங்கே?" தேடித் தேடிப்பார்த்தாள்.

மண்ணோடு மண்ணாய் மன்னனின் வாய்முத்துக்கள் சிதறிக் கிடக்கும் கோரங் கண்டாள் 'கோ' வெனக் கதறி நின்றாள். ஆனாலும் அவள்கொண்ட சோகத்திற்கோர் —முத்தாய்ப்பு வைக்க முடியவில்லை செயங்கொண்டார் எனும் புலவரால்.

**பொருதடக்கை வாள்**
**எங்கே?**
**பொங்கும் மணிமார் பெங்கே?**
**போர்க் களத்தில் எது**
**கூறினும்—**
**புறங்கொடாப் படுவயிரத்—**
**தோள்கள் எங்கே? எங்கே?**

[கலிங்கத்துப் பரணி]

உடைந்த கரங்களை — உருண்ட தலைகளை—ஊற்றெடுக்கும் இரத்த ஆற்றை — உறைந்து கிடக்கும் பிணச் சேற்றை—இப்படிக் கேட்டாளாம்!!

**பாட்டை இன்னொரு முறை படியுங்கள் இன்று வாழ்விழந்து கிடக்கும் நம்மையெல்லாம் பார்த்து—அந்த வீரவனிதை கேட்பதுபோல் இல்லையா? 'அந்த வீரம்' எங்கே? எங்கே? என்று!** ★

---

# மயக்கம்

திடீரென்று யாராவது ஒருவர் தலை சுற்றி மயங்கிக் கீழே விழுவதைப் பார்க்கும் சந்தர்ப்பம் மற்றவர்களுக்கு ஏற்பட்டால் அந்நிகழ்ச்சி உண்மையில் பயங்கரமாகவே இருக்கும். நல்ல உடல் நிலையில் உரையாடிக் கொண்டேயிருந்த ஒருவர் எவ்வித முன்னெச்சரிக்கையுமின்றித் திடீரென்று மயக்கமுற்றுக் கீழே விழுவாராயின் யாருக்குத்தான் அதனால் பயங்கரமும் பீதியும் ஏற்படாமல் இருக்க முடியும்!

உலகமெங்கணும் உள்ள மக்களில் மயக்கத்தால் பீடிக்கப்பட்டவர்கள் மட்டிலும்உட்கார்ந்திருக்கும்போதோ உரையாடிக்கொண்டிருக்கும் போதோ நடந்துகொண்டிருக்கும் போதோ ஓடியாடி குதித்து விளையாடிக்கொண்டிருக்கும்போதோ திடீரென்று வெட்டிய மரம் சாய்வது வது போல மயக்கமுற்றுக் கீழே விழுவது ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் பயங்கரத்தையும் கொடுக்கும் நிகழ்ச்சி என்றே கூறலாம்.

*

தலைசுற்றலும் மயக்கமும் ஒருதனிப்பட்ட பிணியல்ல. தலைவலியும் மலச்சிக்கலும் இருமலும் தனிப்பட்டபிணிகளாக இல்லாதது போன்றுதலைசுற்றலும் மயககமும் ஒருதனிப்பட்ட பிணியல்ல என்றே கூறவேண்டும். ஆனால் தலைசுற்றலும் மயக்கமும் தனிப்பட்ட ஒரு பிணியாக இல்லாவிட்டாலும் அது பல்வேறு பிணிகளால் ஏற்படும் குறிகளில் முக்கியமானதென்பதை உணரவேண்டும். உடல் எங்கணும் ஏற்படும் பல்வேறு பிணிகளிலே தலைவலியும், மலச்சிக்கலும், இருமலும் குணங்குறிகளாக இருப்பது போன்று தலைசுற்றலும் மயக்கமும் வேறு ஒரு தனிப்பட்ட பிணியின் குணங்குறியேயாகும்.

பல்வேறு பிணிகளிலே தலைவலியும், மலச் சிக்கலும் இருமலும் ஏற்படுவது போலவே மயக்கமும் தலைசுற்றலும் தோன்றுவது இயல்பு,இயற்கை.ஒருவருக்குத்தலை சுற்றலும் மயக்கமும் திடீரென்று ஏற்பட்டாலோ நீடித்து அது இருந்துகொண்டிருந்தாலோ அம்மயக்கம் எந்தப்பிணியால்அல்லதுகாரணத்தால் ஏற்பட்டதென்பதை அவசியமாகவும் அவசரமாகவும் தெரிந்து கொண்டு அம் மயக்கம் சுகமடைவதற்குள்ள பரிகாரங்களை உடனே செய்யவேண்டும் என்பது இன்றியமையாததாகும்.

*

திடீரென்று ஒருவர் விழுந்து பேச்சில்லாமல் உணர்வு மாறுவதையே மயக்கம் என்று கூறுவர். இவ்வாறு திடீரென்று மயக்கமுற்று விழுந்த பிணியாளர் உடல் முழுவதுமோ உடலின் பாகங்களான கைகால்களையோ அசைக்கவும் சக்தியற்று விடுவார். இந்நிலையில் மயக்கமுற்றதற்குள்ள அடிப்படையான காரணம் தெரிந்து அதற்குரிய சிகிச்சையை உடனடியாகச் செய்யத் தவறினால் அதனால்

பிணியாளர் இறக்கவும் கூடும். ஒரு குறிப்பிட்ட பிணியால் ஏற்பட்ட மயக்கத்தை அகற்றுவதற்கு மருத்துவரின் உதவியே தேவையாதலால் அம்மருத்துவரைக் கொண்டு உடனே சிகிச்சை செய்துகொள்வது பிணியாளரின் உயிரைக்காப்பாற்றுவதாகும்.

*

உடல் எங்கணும் தோன்றும் பல்வேறு பிணிகளின் குணங் குறிகளே தலை சுற்றலும் மயக்கமும் ஏற்படுவதற்குக் காரணம் என்பதை மேலே விளக்கினோம். தலை சுற்றலோ மயக்கமோ ஏற்படுமாயின் தகுந்த காரணமில்லாமல் அவை தோன்றுவதில்லை. எடுத்துக் காட்டாகக் கூறுமிடத்து ஒருவருக்கு இரத்தத்திலோ சர்க்கரைச் சத்து இயற்கையில் இருக்க வேண்டிய அளவைக் காட்டிலும் மிகவும் குறைந்து போனால் அன்னவரக்குத் தலைச் சுழற்சி அதனால் ஏற்படலாம். "ஹைபோகினிசிமியா" என்னும் பிணியால் இவ்வாறு ஏற்படுவதுண்டு. காக்கை வலிப்பு என்னும் நரம்புக் கோளாறு பிணியினாலும் மயக்கம் ஏற்படுவதுண்டு.

*

இருதயப் பிணியால் ஒருவர் பீடிக்கப்பட்டிருந்தால் அன்னவர்க்குச் சர்வசாதாரணமாக மயக்கம் ஏற்படுவது இயல்பு. இருதயப் பிணியால் பீடிக்கப்பட்டிருப்பவர்க்கு அவ்வுறுப்பு மிகத் துரிதமாகத் துடிக்கும். இருதய அடைப்பு என்னும் பிணியிலும் தலை கிறுகிறுக்கும். மயக்கம் காணும். இருதயத்தின் வால்வுகள் பழுதடைந்திருந்தாலும் மயக்கம் ஏற்படும். இருதயத்தின் வால்வுகள் கோளாறு அடைந்திருக்கிற நிலையில் அதன் துவாரம் சிறுத்துக் குறுகி விடுவதன் பயனாக இருதயத்தால் போதிய அளவான இரத்தத்தை மூளைக்கு அனுப்ப முடியாமல் போகிறது. மூளைக்குப் போதிய அளவில் இரத்தம் போகாவிட்டால் தலை சுற்றலும் மயக்கமும் தோன்றும். இக்காரணத்தால் தோன்றும் தலைசுற்றலும் மயக்கமும் பொதுவாக ஏதேனும் உடல் உழைப்பிற்குப் பிறகே உண்டாவதும் இயல்பாகும்.

*

நம் கழுத்திலே 'காரோடிட் அவடி' என்னும் ஒரு கூட்ட நரம்புகள் உள்ளன. அவற்றிலே எந்த வகையாலும் உறுத்தல் ஏற்படுமாயின் ஒரு சிலருக்குத் தலை மயக்கம் தோன்றலாம், மையோகார்டிடிஸ் என்னும் இருதயப் பிணியிலும் மயக்கம் ஏற்படும். "மையோகார்டிடிஸ்" என்பது இருதயத் தசையின் அழற்சியாகும். இருதயம் என்னும் உறுப்புத் தசையாலானது. அத்தசை சில சமயம் அழற்சியுற்றுப் பலவீனமடையும். இப் பிணியால் பீடிக்கப்பட்டிருப்பவர் படுக்கையில் இருக்கும்போது அவருக்குள்ள இரத்த அமுக்கம் சரியான அளவிலேயே இருக்கும். ஆனால் அப் பிணியாளர் படுக்கையில் இருந்து எழுந்திருக்கும்போது இரத்த அமுக்கம் இறங்கும். அதனால் அவருக்குத் தலை சுற்றலும் மயக்கமும் ஏற்படும். இதையே வேறு வார்த்தையில் கூறவேண்டுமானால் பிணியாளர் படுத்திருக்கும்போது மயக்கமோ தலைசுற்றலோ இல்லாமல் இருப்பார். ஆனால் படுக்கையில் இருந்து அன்னவர் எழுந்ததும் உடனே மயக்கமும் தலைசுற்றலும் ஏற்படுவதாகக் கூறுவர். மையோகார்டிடிஸ் என்னும் பிணியிலே இவ்வாறான குணங் குறிகள் தோன்றும்.

*

ஒரு பெண் கர்ப்பவதியாக இருப்பதன் அடையாளமாக அன்னவருக்குத் தலை சுற்றலும் மயக்கமும் ஏற்படுவதுண்டு. கற்ப அவயவம் கருவுற்றிருக்கிற நிலையில் மாறுதல் அடைவதன் பயனாக அன்னவருக்கு மயக்கம் ஏற்படுவதற்கு காரணமாகும். இவ்வாறு ஏற்படும் தலைச்சுற்றலை 'மசக்கை' என்றும் தமிழ் நாட்டில் கூறுவர். கருவுற்றதன் பயனாக ஏற்படும் தலைச்சுற்றலும் மயக்கமும் சிறிதளவே இருக்கும். அன்னவருக்குள்ள உடல்நிலையைப் பொறுத்துச் சிறிது மயக்கம் அதிகமாக இருப்பதும் உண்டு. அதனால் படுக்கையில் இருப்பதும் உண்டு. இம்மயக்கத்தோடு உணவருந்துகிற வேளைகளில் எல்லாம் சிறிதளவு வாந்தி ஏற்படுவதும்உண்டு. உட்கொண்ட உணவு வாந்தியாவதாலும் தொடர்ந்து மயக்கம் இருப்பதாலும் போதிய உணவை உட்கொள்ளமுடியாமையாலும் கர்ப்பவதியாக உள்ளவர் தொல்லையும் துன்பமும் அனுபவிப்பார். இவ்வாறு தோன்றும் தலைச்சுற்றலாலும் மயக்கத்தாலும் அன்னவரது உயிர்க்கு அபாயம் ஏற்பட்டுவிடுவதில்லை. கருப்பையில் உள்ள குழந்தை நாளடைவில் வளர்ச்சி அடைவதன் பயனாக அன்னவர்க்கு ஏற்பட்ட தலைச்சுற்றலும் மயக்கமும் மாறுதல் அடைந்து உடல் நிலை இயற்கையான தன்மை அடைவது இயல்பாகும்.

*

பெண்களுக்கு மாதவிடாய் கோளாறுகளினால் ஏற்படும் ஹிஸ்டரியா என்னும் பிணியாலும் மயக்கம் ஏற்படுவதுண்டு. திடீரென்று பயப்படுதல், துக்கப்படுதல், மகிழ்ச்சி அடைதல்போன்ற செயல்களாலும் மயக்கம் ஏற்படுவதுண்டு. நல்ல சுத்தமான காற்றோட்டமில்லாத இடங்களில் வசிப்பதாலும் மயக்கம் ஏற்படுவதுண்டு.

உடலில் உள்ள நரம்பு மண்டலத்திற்கு ஏற்பட்ட கோளாறுகளினால் மூளைக்கு இரத்தம் ஏறுவதில்லை. அவ்வாறு மூளைக்குப் போதிய இரத்தம் ஏறாததன் பயனாக மயக்கமும் தலைச்சுற்றலும் ஏற்படுவதற்குக் காரணமாகும்.

*

ஆகவே தலைச்சுற்றலும் மயக்கமும் பல்வேறு பிணிகளால் தோன்றுவதுண்டு என்பது பற்றிய விவரங்களை மேலே விளக்கினோம். ஒருவருக்கு மயக்கம் நீடித்து இருந்துகொண்டே இருக்கலாம்; அல்லது தோன்றித் தோன்றி மறைந்துகொண்டும் இருக்கலாம். திடீரென்று மயக்கம் ஏற்பட்டுக் கீழேயும் விழலாம். இவ்வாறு குறைந்த அளவிலோ பெருமளவிலோ ஏற்படும் மயக்கம் எக்காரணத்தினால் ஏற்பட்டதாயினும் அதை அற்பமாகவும் அசட்டையாகவும் நினையாது அதற்கு உரிய சிகிச்சையைக் காலதாமதமில்லாமல் செய்துகொள்வது பலவற்றாலும் நன்மையாகும். தலைச்சுற்றலும் மயக்கமும் தோன்றுவதற்கு மூலகாரணமாய் உள்ள பிணி சுகமடையும்போது அப்பிணியால் ஏற்பட்ட தலை சுற்றல், மயக்கம் போன்ற குணக் குறிகளும் மறைந்து ஒழியும் என்பதில் கிஞ்சிற்றும் சந்தேகமே இல்லை. பல்வேறு பிணிகளின் விளைவால் ஏற்படும் மயக்கத்தை அகற்றிக்கொள்வதற்கு உரிய சிகிச்சையை உடனே பெற்றுக்கொள்வது சாலச் சிறந்ததாகும் என்போம்.

—த. மு.


## அறிவிப்பு

ஓவிய விற்பன்னர்கள் மாதவம் பிள்ளை, பாலு பிரதர்ஸ், அய்க்கன் எழுதிய பொங்கல் வாழ்த்து டிசைன்கள் (22-கொண்டது) விற்பனைக்கு தயார். மாதிரி வேண்டுவோர் ரூ 3/- M. O. செய்யவும்.

**பகுத்தறிவுப் பண்ணை**
தஞ்சை.

# அறிவாயுதம் கொண்டு!

—[அண்ணல்]—

கத்தியை எடு! புத்தியை விடு!!
கம்பு எங்கே? கிளம்பு இப்போதே!
வெட்டு! குத்து! விடாதே, அடி!
கொள்ளை! கொலை! அஞ்சாதே, செய்.
கழனிகள், களமாகட்டும்.
கலவரமும் பீதியும் எங்கும் நிலவட்டும்.

•

இதுபோன்றதோர் நிலைமையினை ஏழெட்டாண்டுகளுக்கு முன்பு, தமிழகத்தின் சில பகுதிகளிலே, கண்டோம். காரிருள் வந்தால் கிராமவாசிகள் எல்லாம், கிலிகொள்ளும் வேதனையான நிலையிருந்தது. எப்போது வருவரோ! எப்படியெல்லாம் தாக்குவரோ!!—என்கிற அச்சத்துக்கு ஆட்பட்டவராய் மக்களெல்லாம் நடுங்கினர். அமைதி, விடைபெற்றுக்கொண்டது, அதுபோது. பயங்கரமும் பலாத்காரமும் தலைவிரித்தாடியது.

நள்ளிரவில் வந்து வேட்டையாடிடும் கொள்ளைக் கூட்டத்தினரல்ல, இதற்குக் காரணம்! அரசியல் நோக்கம் கொண்ட சிலர் அதுபோது, 'இப்படியொரு பாதையை வகுத்துக்கொண்டிருந்தனர்!!

இதன் காரணமாக, துப்பாக்கிகள் வெடித்தன—பல தொண்டர்கள், ஓடவிடப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்—தஞ்சை போன்ற இடங்களிலே, அதிகாரப் புலியும், வேண்டுமளவுக்கு வேட்டையை நடத்திற்று.

ஒரு பக்கம் அரசியல் கட்சி, தவறான பாதையிலே சென்றுகொண்டிருந்தது! இன்னொரு பக்கம் இதுதான் நல்ல சமயம் என்று ஆட்சிப் பீடத்திலிருந்த காங்கிரஸ் கட்சி, சுட்டுப் பொசுக்கிக்கொண்டேயிருந்தது!!

நல்லோர், நாணினர்; நடுங்கினர்; வருந்தினர். இரு சார்பினரின் நடத்தையாலும், அன்பும் சாந்தமும் மறைந்து நாடு இரத்தக் காடாகிறதே என நொந்தோம், நாம்.

*

"ஏனய்யா! பொது வாழ்க்கையில், ஆத்திரமும் வெறிச் செயலும், எதற்கு?"

"காம்ரேட்! உனக்கு, சர்வதேசிய அரசியல் புரியாது. ரஷ்யாவில் ஜாரின் ஆட்சியை எப்படி ஒழிக்க முடிந்தது அறிவாயா?"

"ரஷ்யாவில் ஒரு ஜார் இருந்தான்; இங்கே அப்படியொரு மன்னன் இல்லையே......"

"ஏனில்லை! இங்கும் ஜார் குணம் படைத்த சிலர் இருக்கிறார்கள். இவர்களெல்லாம், குட்டி ஜார்கள் தான்! இவர்களுக்குப் பாடம் புகட்டவேண்டுமென்றால், இப்படியொரு புரட்சி நடந்துதான் தீரவேண்டும்......"

"புரட்சி என்றால் என்ன பொருள்?"

"காம்ரேட்! உனக்கு கதை எழுதவும், அடுக்குமொழி பேசவும் தான் தெரியுமே ஒழிய, புரட்சியின் உண்மைப் பொருள் அறியாய். ஆயினும், நான் தெளிய வைக்கிறேன். அக்கிரமக்காரர்களை அழித்து, அவர்களது அட்டகாசங்களுக்கெல்லாம் முடிவுகட்டி ........."

"ஆதிக்கத் தர்பார் புரிவோரின் அட்டகாசங்களுக்கு முடிவுகட்ட வேண்டுமென்பதை எங்கள் கழகமும் மறுக்கவில்லையய்யா......"

"அட்டகாசங்களுக்கு முடிவு கட்டுவதென்றால், அதற்குக் காரணமானவர்களையே வெட்டி வீசவேண்டும். ஆகா! வென்றெழுந்ததுபார் யுகப் புரட்சி, என்று பாரதி பாடினான் பார், அதுபோல இங்கும் ஒரு புரட்சி உண்டாகி, பொல்லாதவர்களையெல்லாம் பொசுக்கிடல் வேண்டும்."

"எனக்கென்னமோ, இந்த வெறியாட்டம் இல்லாமலேயே, சமூகத்தில் நீ விரும்பும் நிலையைக் கொண்டு வரமுடியும் என்று நம்புகிறேன். ஜனநாயக ரீதியிலேயே, சமதர்மத்துக்கு, துவக்கவிழா நடத்த இயலுமென உறுதியாக நினைக்கிறேன். ஒருவரையொருவர் வெட்டிக் கொல்வதும், பெண்களை நடுங்கச் செய்தலும்தான் அரசியல் புரட்சி என்றால், அப்படியொரு புரட்சி இல்லாமலேயிருக்கலாம். மனித குலத்துக்கு என்று இருக்கும் அருமையான குணம், அன்புதான்! அதன் மூலம்..."

"சிங்கத்தைச் சுண்டெலியாக்கி விடுவாய்! சீறும் புலியை வெள்ளாடாக்கிவிடுவாய்! இல்லையா ......?"

"உன் கேலி, அவசரத்தின் விளைவு. சிங்கத்தைச் சுண்டெலியாக்க முடியாவிட்டாலும், சிங்கம் பசுக்களின்மீது பாயாதபடி, ஜனநாயக முறையில், சட்டம் என்கிற கூண்டு மூலம் பாதுகாப்புப் பெற முடியும் என நம்புகிறேன். நீ சொல்லும் சமதர்மம், கம்யூனிசம் எதையும் அமைதியான வகையில் பெறவேண்டும் என்பதுதான், எனது கழகத்தின் கொள்கை"

"காம்ரேட்! நீ ஒரு பிற்போக்குவாதி—பூர்ஷ்வா குணம், உனக்கும் உள்ளது. அதனால்தான், ஏகாதிபத்ய தாசனாகப் பேசுகிறாய் நிலப் பிரபுகளுக்கு, வக்காலத்து வாங்குகிறாய்......"

"ஆத்திரம், அறிவை மறைக்கும் தோழரே! நீர் எது கம்யூனிசம் என்று சொல்கிறீரோ, அதே

கொள்கையினைத்தான் நாங்களும், அடிப்படைக் கொள்கையாகக் கொண்டிருக்கிறோம். ஆண்டான், அடிமையெனும் பேதம் பொருளாதாரத்துறையில் ஒழிந்துவிட்டால்போதும் என்கிறாய். அந்தப் பேதம், பொருளாதாரத்துறையில் மட்டுமின்றி சமூகத் துறையிலும் ஏற்படவேண்டுமென்று ஒருபடி மேலேயே சென்று, எங்கள் கழகம் சொல்லுகிறது......''

''தெரியுமே, நீ ஒரு வகுப்புத் துவேஷி என்பதுதான் ஊரறிந்த விஷயமாயிற்றே!''

''பார்த்தாயா, நீயே இப்படி' எங்கள் மீது பழியைப் போடுகிறாய்? மேல்சாதியினரின் திமிர்வாதத்தைக் கண்டிக்கும் எங்களைத் துவேஷி என்கிறாயே! எமது துவேஷத்தால் யாருக்கு தீங்கு வந்தது? உன்னைப்போல, வெட்டவும் கொளுத்தவுமா, சொல்லுகிறோம்?''

''......நீ பேசுவதில் கெட்டிக்காரன்! நீ, என்ன சொன்னாலும் சரி, இன்று நாங்கள் செய்வதுதான் சரியான புரட்சி. இப்படி நடக்க வேண்டுமென்றுதான் 'இந்த'ப் புத்தகத்தில், 'இத்தனை' யாவது வரியில் ஸ்டாலின் சொல்லியிருக்கிறார். போ போ!''

*

இப்படி, பதில் தந்தனர், கம்யூனிஸ்டுத் தோழர்கள்! தஞ்சை மாவட்டம் போன்ற இடங்களில், 'புரட்சி' என்கிற பெயரால் பல நாசங்கள் விளைந்தன — வீடுகள் பல, தாக்கப்பட்டன — சின்னஞ்சிறு :மிராசுதாரர்கள் எல்லாம், சிக்கி வதைபட்டனர்!!

ஆண்ட காங்கிரசாட்சியும் இதுதான் சந்தர்ப்பம் எனக் கருதி, களப்பால் குப்பு, இரணியன் போன்ற நல்ல தொண்டர்களையெல்லாம் வேட்டுக்கு; இரையாக்கிற்று — வேதனைகளை அள்ளியள்ளி இறைத்தது.

நாம், அதுபோது--கம்யூனிஸ்டுகளின் போக்கைக் கண்டு மனம் நொந்தோம்! ஆட்சியினரின் அட்டகாசப் போக்கையும் கண்டித்தோம்!!

**தமிழகத்து அரசியல் வரலாற்றில் ஏச்சுக்கும் பேச்சுக்கும், ஏளனத்துக்கும் கேலிக்கும், கண்டனத்துக்கும், கிண்டலுக்கும், ஆளாகியவர்கள் நம்மைவிட யாரும் கிடையாது.**

**ஆனாலும், நம்மால், இதுவரை எந்தத் தனிப்பட்ட நபருக்கும் அல்லது அவர்தம் குடும்பத்துக்கும் சிறு தொல்லையும் ஏற்பட்டது கிடையாது.**

முடியாது என்பதல்ல, காரணம்! மூர்க்கத்தனமும், முரட்டுப் புத்தியும், பொதுவாழ்வில் கலக்கக்கூடாது என்பது நமது கருத்தாகும். அதோடு, எதையும், வேட்டு கிளப்பியல்ல; வோட்டு மூலமே சாதிக்க வேண்டும் என்பதிலும், நமக்கு அசையாத நம்பிக்கையுண்டு.

**மனித வாழ்க்கையில், ஆயிரமாயிரம் முரண்பாடுகளும், குறைபாடுகளும் உண்டு. அத்தனையையும், அமைதியான முறையில், ஏன், தீர்த்துக் கொள்ளக் கூடாது, என்பதே நமது இதயம் அடிக்கடி கேட்கும் கேள்வியாகும்.**

நம்முடைய இந்தச் சாந்த குணம் கண்டு, கையாலாகாதவன் என்று பேசியோருண்டு; வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று பார்க்காமல் சமரச அந்தாதி பாடியா சமூகநீதி பெற இயலும் என்று கேட்டோருண்டு. அவர்களில், முதன்மையான இடம் வகித்தவர்கள், இந்நாட்டுக் கம்யூனிஸ்டுகளாகும்.

அவர்கள், தமது அரசியல் சாதனையைப் பெற, அரிவாளையும் கம்பையும் எடுத்த காலத்தில், மனம் வருந்தினோம். பிறகு, அந்தப் பயங்கரப் பாதையை விட்டு, சட்டசபைக்குள் நுழைந்து, ஜனநாயக முறையில், காரிய சாதனை பெறப்போவதாக அறிவித்ததும், மகிழ்ந்தோம்.

வரவேற்று, எழுதினோம்; பேசினோம்.

ஏனெனில் வாளும் வேலும் தான், சமூகப் புரட்சியைக் கொண்டுவரும் என்பதில்லை! வெட்டும் அரிவாளைவிட' விவேகியின் சொல், பலம் பொருந்தியதாகும்—கத்தியை விடப், புத்தி மிகப்பெரிது!!

பலாத்காரத்தின் மூலம் பணியச் செய்வதைவிட, அறிவாயுதம் கொண்டு கருத்தில் புரட்சி உண்டு பண்ணிவிட்டால், காரிய சித்தி நிச்சயம் என்பதில் எப்போதும் நமக்கு அசையாத நம்பிக்கை உண்டு.

அதனை, இப்போதும் சரி; அப்போதும் சரி, நாம் வலியுறுத்தத் தவறவில்லை.

இந்தக்கருத்தை, இந்த கிழமை 22-ந்தேதி, ருசியத் தலைநகராம் மாஸ்கோவில் கூடிய 12-நாடுகளின் கம்யூனிஸ்டுத் தலைவர்களும் ஏற்றுக்கொண்டு ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர்.

**உள்நாட்டுப்போர் இல்லாமல், சமாதான முறைகளில் ''சோஷலிசத்தை'' ஏற்படுத்த முடியும்.**

**பொதுக் கூட்டணியோ அல்லது மற்ற அரசியல் ஒத்துழைப்பு முறைகளையோ கையாண்டு, பாட்டாளி வர்க்கம் பார்லிமெண்டு 'மெஜாரிடி' பெற்று, அதிகாரத்தைக் கைப்பற்ற முடியும்.**

மாஸ்கோவிலிருந்து வருகிறது, இந்தக் கீதம்! 12-கம்யூனிஸ்டு நாடுகளின் தலைவர்கள், அறிவிக்கின்றனர், இப்படி!!

இந்த முடிவை மனதார வரவேற்கிறோம், நாம். மகிழ்ச்சியுமடைகிறோம்.

கத்தியாலும், கலகத்தாலும் தான் சம நீதியைப் பெறமுடியும் என்பது — மனித மார்க்கத்துக்குப் புறம்பான செயல்.

மனிதனுக்கு, ஆறுவது அறிவு ஒன்று இருப்பது, எதையும் உணர்ந்து காரியமாற்றத்தான். அந்த அறிவு பக்குவமடையாமலிருக்கலாம், பலருக்கு. அதற்கா வன செய்தால், தன்னாலே அமையும், புதிய வாழ்வு.

இந்த உண்மையை, எந்த மாஸ்கோவைத் தமது குருபீடம் என்று கருதிக்கொண்டு, முன்பு வாதிட்டனரோ அந்த இடத்திலிருந்தே இந்த அறிவிப்பு வருகிறது, மகிழவேண்டிய, முடிவாகும் இது. மாஸ்கோ, மீண்டும், நமது பாராட்டுதலைப் பெறுகிறது.

★

# கையெழுத்து

[மா. கி. தசரதன்]

"அவரிடம் இதில் ஒரு கையெழுத்து வாங்கி வந்துவிடு, ஆயிரம் என்ன இரண்டாயிரம் தருகிறேன்" என்று சிலர் சொல்வதுண்டு. அதென்ன 'ஒரு' கையெழுத்துக்கு அவ்வளவு மதிப்பா—இரண்டாயிரமா என்று திகைக்கக்கூடும். ஆனால் எத்தனையோ பேர் வெறும் கையெழுத்துப்போட்டே பெரியபெரிய வாணிபம், தொழில் முதலியன செய்துவிடுகின்றார்கள். கையெழுத்து என்பது மனிதனின் வாழ்க்கையில் அவ்வளவு முக்கியமான இடத்தைப் பிடித்துக் கொண்டிருக்கின்றது. நாம் நேரிலே போக இயலாதபோது நம்முடைய கையெழுத்துப் போனால் ஒரு வேலை முடிகின்றது. நாம் சொன்னதை நம்முடைய கையெழுத்து உறுதிப்படுத்துகின்றது. நமக்குப் பதிலாக அது எத்தனையோ செயல்களில் ஈடுபட்டுப் பாடுபடுகின்றது. பத்திரத்தில் கையெழுத்துப்போட்டுக் கடன் வாங்கினால் அந்தக் கடனைத் திருப்பித் தருகின்றவரையில் நமக்குப் பதிலாக அது பிணை இருக்கிறது. இதெல்லாம் ஒருவன் சொன்ன சொல்லைக் காத்துக் 'கற்போடு' இருக்கிற வரையில் தான். சொல்திரம்பி சோர்வுபட்டால் கையெழுத்தையும் நம்புவதில்லை, கையெழுத்துப்போடுகின்ற வரையும் நம்புவதில்லை.

"அவர் என்ன! நானே போடுகின்றேன், கையெழுத்தை; ஆயிரம் வேண்டாம் அறுநூறு கொடுங்கள்" என்று சிலர் கேட்டால், "உன்னை நம்பியா— சரிதான். ஒரு ரூபாய்க்கே நீ எத்தனை வேண்டுமானாலும் போடுவாயே— எனக்குத் தெரியுமே உன்னை" என்று சொல்லிவிடுவார்கள்.

இவ்வளவு ஆற்றல்படைத்த அந்தக் கையெழுத்துதான் என்ன? கொஞ்சம் எண்ணிப்பார்க்கவேண்டும். தமிழ்எழுத்துக்கள், உயிர்பன்னிரண்டும், மெய்பதினெட்டும் தான் இருக்கின்றன. தமிழ் படித்தவர்கள் எல்லோரும் இந்த எழுத்துக்களில் தங்கள் பெயரை, பெயருக்கு உடைய அவர்களே எழுதினாலும், வேறு யார் எழுதினாலும் எழுத்துக்கள் மாறுவதில்லை. கோவலன் என்ற பெயரைக் கோவலன் எழுதினாலும் மாடலன் எழுதினாலும் ஒருவகையில்தான் இருக்கும்.

ஆனாலும் கோவலனின் பெயரைக் கோவலனே எழுதுவதும் மாடலன் பெயரை மாடலனே எழுதுவதும் தனி மதிப்புப் பெறுகின்றது. அதுவும் வெறும் பெயரை மட்டும் எழுதுவதில் இல்லாத மதிப்பு 'கையெழுத்து' என்பதில் ஏற்படுகின்றது.

எல்லோரும் கையால்தான் எழுதுகின்றார்கள். ஆனாலும் 'கையெழுத்து' என்று தனியாக ஒன்றைச் சொல்லுகின்றோம். அது எப்படி வந்தது? எப்போது வந்தது? ஏன் வந்தது? இந்த ஆராய்ச்சி செய்வதற்கு முன்னே பழைய முறை— தமிழைப் பொறுத்தவரை — எப்படி இருந்தது என்பதனைக் காணுவோம்.

மிகப் பழங்காலத்தில் 'கையெழுத்து' முறை இருந்ததாக அறியக்கூடவில்லை. அப்போதெல்லாம் வெறும் வாய்ச்சொல்லே போதும்போல் இருந்திருக்கிறது. படிப்படியாகத்தான் எழுதிச்சான்றுகள் சேர்த்து வழக்கு மன்றத்தில் வழக்காடித் தவணை கேட்டு வாதியும் பிரதிவாதியும் சமாதானம் செய்துகொண்டு ஒத்துப் போவதோ, சண்டை பெருக்கி நாசமாவதோ வந்திருக்கும்போல் தோன்றுகின்றது.

ஏறத்தாழ பத்தாம் நூற்றாண்டுக்குப் பின் எழுந்த கல்வெட்டுக்களில் எல்லாம் எதையாவது எழுதி, அதை உறுதிப்படுத்தும் வகையில் கடைசியில் 'இதற்கிவை என் எழுத்து' என்று எழுதுகின்ற முறை இருக்கக் காண்கிறோம்.

இதில் நாம் இப்போது சொல்லும் 'கையெழுத்து' என்பதற்கு மாறாக 'என் எழுத்து' என்ற தொடர் இருக்கினறது. அது தான் உண்மையான முறை.

எழுத்துக்களின் வடிவம் ஒன்று என்றாலும், ஒவ்வொருவரும் எழுதுகின்ற முறை என்று ஒன்று இருக்கின்றது. அதனால் தான் கோவலன் பெயரை மாடலன் எழுதும்போது மாறுபாடு இருக்கின்றது. 'இதற்கு இவை என் எழுத்து' என்றால் நான் ஒப்புக் கொண்டதற்கு அறிகுறி என் கையெழுத்து என்றாகின்றது.

ஆங்கிலத் தொடர்பு தமிழகத்தில் ஏற்பட்ட பிறகுதான் கையெழுத்து என்ற தொடர் உண்டாகியிருக்கும் என்று துணிய முடிகின்றது. ஏனெனில் 'கையெழுத்து' என்ற தொடரைப் பயன் படுத்தும்போது 'கையெழுத்துப் போடுவது' என்று சொல்லுகின்றோம். இது எப்படி வந்தது என்று பார்க்கவேண்டும். கையெழுத்து—இட்டான்—செய்தான் என்று இரண்டு முறைகள் இருக்கின்றன. 'கையெழுத்துப் போட்டான்' என்பது தான் பெருவாரியான வழக்கு. இது ஆங்கிலத்திலிருந்து வந்தது என்பதைக் காட்டுகின்றது.

'Puting the signature' என்று ஆங்கிலத்தில் எழுதுவதை யாரோ முதன் முதலில் ஆங்கிலத்தில்இருந்து தமிழ்ப்படுத்துகின்றபோது Put என்ற சொல்லுக்குப் 'போடு' என்பது பொருள் ஆனதால் கையெழுத்துப் போடுதல் என்று தமிழிலும் எழுதி இப்போதும் அதுவே வழங்கி வருகின்றது என்று கருத இடம் இருக்கின்றது.

ஒருவருடைய சார்பில் இருந்து அவரைக் குறிப்பிடுவது என்று 'சிக்னேச்சர்' என்ற (கையெழுத்து) சொல்லுக்குப் பொருள் சொல்லுகின்றனர். வேறு ஒரு சொல்லும் இருக்கிறது. அது 'சைன்' என்பது. அந்தச் சொல் நேரிடையாகவே அறிகுறி அல்லது

அடையாளம் என்ற பொருள் தருகின்றது.

ஆங்கிலத்திலும் சரி தமிழிலும் சரி 'கையெழுத்து' ஒருவருடைய சார்பாக—அவருடைய பிரதிநிதியாகத் திகழ்வதைக் கண்டோம்.

இந்தக் 'கையெழுத்து' இல்லாமல் வெறும் எழுத்துக்கள் என்ன என்று பார்ப்போம். இலக்கணக்காரர்கள் ஒலியின் கூட்டம் எழுத்துக்கள் என்கின்றனர்.

நாம் வாயைத் திறந்து 'ஆ' என்று சொல்லுகின்றோம், 'ஊ' என்று சொல்லுகின்றோம். எதிரில் இருப்பவர்களிடம் இப்படி வாயைத் திறந்து 'ஆ' 'ஊ' என்று சொல்லிவிடலாம். ஆனால் தொலைவில் உள்ளவர்களுக்கு எப்படிச் சொல்லுவது? அந்த முயற்சியில் தோன்றியதுதான் எழுத்து என்பது. அதாவது வாயினின்றும் வெளிவரும் ஒலியின் பிரதிநிதியாக எழுத்து இருக்கின்றது.

உலகத்தில் வழங்கும் பல இன மக்களிடையில் பலவகையான முறையில் இந்த எழுத்துக்கள் வளர்ந்திருக்கின்றன. எழுத்துக்களின் கதை சுவைமிக்க பெரிய வரலாறாகும்.

தமிழ்மொழியில் இருக்கும் சொல் ஆழத்தை இங்கே கொஞ்சம் காணுவோம்.

எழுத்து

எழுந்து

என்ற இரண்டு சொற்களில் ஒரே ஒரு வேறுபாடுதான் இருக்கின்றது. மூன்றாவது எழுத்துமட்டும்தான் இரண்டிலும் வேறு வேறு. அவைகூட ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாத எழுத்துக்கள் அல்ல. ஒரே சார்பு உடையவை என்று சொல்லுவார்கள். அந்த இரண்டு எழுத்துக்கள் பெரிய பொருள் வேறுபாட்டைத்தருகின்றன.

இந்த இரண்டு சொற்களிலும் முதலில் இருக்கும் இரண்டு எழுத்துக்கள் 'எழு' என்று ஏதோ இல்லாத ஒன்று உருவாவதை உணர்த்துகின்றன. இப்படி தமிழ்ச் சொற்களில் சிறிய சிறிய ஒலி வேறுபாடுகளில் பெரிய பெரிய பொருள் மாறுபாடுகள் ஏற்படுவதைக் காணுகின்றோம். இது ஒரு மொழியினுடைய அழுத்தத்தைக் காட்டுவது என்று மேற்கு நாட்டு மொழி நூல் அறிஞர்கள் கருதுகின்றார்கள்.

இதுவரையில் கண்ணுக்குத் தெரிந்த எழுத்துக்களைக் கண்டோம். இனிக்கண்ணுக்குத் தெரியாத எழுத்துக்களைக் காணுவோம்!

அதைக் காண ஏதாவது மாய மந்திரம் தெரிந்திருக்க வேண்டுமோ என்று திகைக்கவேண்டாம், அல்லது துப்பறியும் புதினங்களில் வரும் 'இரகசியமை'யால் எழுதிய எழுத்துக்களோ என்றும் நினைக்கவேண்டாம்.

"என்ன ஐயா செய்வது. நானும் எவ்வளவோ முயன்றுதான் பார்க்கின்றேன். முடியவில்லையே. நான் என்ன செய்வேன்? என் தலை எழுத்து அது" என்று வாழ்க்கையில் பல முறை தோல்வி கண்டவர்கள் சொல்லக்கேட்கின்றோம். 'அப்படித்தான் அவன் தலையில் எழுதியிருக்கிறது' என்று சொல்லுகின்றதையும் கேட்கின்றோம்.

விஞ்ஞானிகள் இந்த உடலை அறுத்து, தலையைப் பாகம் பாகமாகப் பிரித்துத் துருவித்துருவிப் பார்த்துவிட்டார்கள். அங்கே எந்த எழுத்தையும் காணோம்! ஆனாலும் இன்னும் சில பேர் காணாத அந்தப் பொல்லாத தலை எழுத்தை எண்ணித் தலையில் அடித்துக்கொண்டு அழுகின்றார்கள்.

இன்னும் வடநாட்டுக் கதை ஒன்றில் காளிதேவி காளிதாசனைக் கவியாக்கிவிட வேண்டும் என்று அவன் நாக்கிலே எழுதியதாகச் சொல்லிக் 'கதைக்கப்பட்டிருக்கிறது'!

தமிழ் இலக்கியத்தில் இந்தக் 'காணாததைக் காட்டும்' தெருக்கோடிச் செப்படி வித்தைகள் காணோம். ஆனால் எழுத்தைப் பற்றிப் பல சுவையான செய்திகள் இருக்கின்றன.

இடைக் காலத்தில் சில மன்னர் கவிவாணர்கள் சொன்ன பாடலைக் கேட்டு மனம் மகிழ்ந்து எழுத்துக்கு இவ்வளவு என்று பரிசில் கொடுத்ததாகச் சொல்லுவார்கள்.

பழம் புலவர்களைப் பற்றிச் சொல்லும்போது இன்றும், "அவரிடம் இதெல்லாம் நடக்காது ஐயா. தொல்காப்பியத்தை எழுத்து எண்ணிப் படித்தவர் அவர்" என்று சொல்லக் கேட்கின்றோம்.

திருவள்ளுவர் எழுத்தைப் பற்றிச் சொல்லும்போது மனிதருக்கு அது 'கண்' என்று சிறப்பித்துச் சொல்லுகின்றார். "எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்" என்று வேறு ஒரு பாடல் வரியும் இருக்கிறது.

இவ்வளவு அருமை பெற்றிருக்கும் எழுத்தை அறிந்துகொள்ளத் துணை செய்யும் ஆசிரியரை உயர்ந்த நிலையில் நினைத்துப் போற்ற வேண்டும் என்றுதான் 'எழுத்தறிவித்தவன்' பெருமையை எல்லாவற்றையும்விட உயர்வாக மதித்துச் சொல்லி வருகின்றோம்.

நல்ல வகையில் எல்லார்க்கும் பயன்படும் இந்த எழுத்துக்கள் தீயார்க்குத் துணை நிற்கின்றதும் உண்டு, கள்ளக் கையெழுத்துப் போட்டுக் கயமைச் செயல்களில் ஈடுபடுகின்றவர்கள், ஒருதீமையும் செய்யாதவர்களை இன்னலில் இழுத்துவிட அவர்களைப்போல எழுதிப் பழகி எழுதி விடுவது, இதெல்லாம் சில வழிகள். முத்து முத்தாக எழுதுவது ஒரு சிறப்பு என்று சொல்லி சின்னப் பிள்ளைகளை நாள் தோறும் எழுதி எழுதிப் பழகச் சொல்லுகின்றோம். 'கோணல்மாணலாக' எழுதியிருக்கும் எழுத்தைப் பார்த்தால் "இதென்னடா எழுத்து? கோழி கிளறியதுபோல, கடற்கரை மணலில் நண்டு நடைபோட்டது போல்" என்று சொல்லுகின்றோம். எழுத்து எப்படியிருந்தாலும், அது தாங்கி வரும் பொருள் தக்கதாக இருக்கவேண்டும் என்பதைஎல்லோரும் ஒப்புக்கொள்ளுவர்.

எழுத்து என்பது வெறும் எழுத்துக்களைமட்டும் குறிக்காமல் வேறு பொருளையும் குறிக்கின்றது.

'ஓவியம் எழுதினான்' என்றால் வரைந்ததைச் சொல்லுகின்றது.

இவ்வாறு இந்த 'எழுத்து' நம்முடைய வாழ்க்கையில் பலதுறைகளில் நிறைந்து நிற்கின்றது என்பதை எண்ணிப்பார்க்கின்றபோது அதன் ஆற்றலைக்கண்டு வியக்கின்றோம்; அதனை எழுதி மாளாது என்று தீர்மானிக்கின்றோம் அல்லவா? எழுத்து கையெழுத்தானதை ஆராயப் புகுந்தாய், அது இன்னும் விரியும் போலல்லவா தெரிகிறது. ★

4-ம் பக்கத் தொடர்ச்சி

"வடக்கே ஏற்படுத்தப்பட்டு வரும் பெரிய திட்டங்களோடு ஒப்பிட்டுப்பார்த்தால், தெற்கில் எதுவுமில்லையென்பது தெரியும்."

இதுதான் உங்களது வழக்கமான பல்லவியா யிற்றே எனக் கூறக்கூடும்! இதுபோலச் செப்புவது, நாமல்ல—24ந் தேதிய 'மெயில்' ஏடு!!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறை வேற்றுவதற்குப் போதிய பணமில்லாததால் எதை யெதை முன்னதாகச் செய்யலாம், எதெதை பிறகு செய்யலாம் என்று டில்லியில் ஒரு யோசனை உள்ள தாம்.

இங்குதான், இதுவரையில் எதுவுமே இல்லையே! இந்நிலையில், இந்த யோசனையும் வந்தால், தெற் குக்கு அடுத்த ஐந்தாண்டில் என்ன நன்மைகள் கிடைக்கமுடியும்?

"தெற்கு, தொழில்துறையில் பின் தங்கிக் கிடக்கிறது. இதனால் பொருளாதாரச் செழிப்பு, தெற்கே இல்லை. இதற்குக் காரணம், மத்திய சர்க் காரை, ஆட்டிப்படைப்பவர்கள் "வடவர்"களாகவே இருப்பதுதான். வடவர்கள், ஒருபோதும், தென் னாட்டுக்கு உதவமாட்டார்கள்!! — என்று, எதிர்க் கட்சிக்காரர்கள், எடுத்துரைத்து வருகிறார்கள். இந்தக் கண்டனத்தைப் பொய்ப்பிக்க வேண்டு மானால், மத்திய சர்க்கார் முன்னைவிட ஏராளமான உதவிகளைத் தந்தால் அதைக்காட்டி, எதிர்க்கட்சி களுக்குக் காங்கிரசாரால் பதில் சொல்லமுடியும். டில்லி, இதற்குச் சாதகமான சூழ்நிலையில் இல்லை.

பல ஆண்டுகளாக சேலத்தில் ஒரு இரும்பாலை வேண்டுமென்று கிளர்ச்சி செய்யப்பட்டு வருகிறது. சேலத்தில், ஏராளமான இரும்புத் தாதுப்பொருளும் கிடைப்பதால், இக் கோரிக்கை வலியுறுத்தப்பட்டு வருகிறது. யாரும், இந்தக் கோரிக்கையைக் கவனிக்கவேயில்லை. முப்பது இலட்சம் டன் இரும் பாலை இயந்திரங்கள் வடக்கே கொண்டுவந்து நிறு வப்படுகின்றன. இதற்காக பல நூறு கோடி ரூபாய் கள் செலவாகின்றன. காரணம் கேட்டால், சேலத் தில் கிடைக்கும் இரும்புப் பொருள் தரக்குறைவான தென்றும், ஆலைக்கு வேண்டிய நிலக்கரியை பீகாரி லிருந்து கொண்டுவரவேண்டியிருக்குமென்றும் கூறப்படுகிறது. ஏன், நெய்வேலியில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரி இதற்குப் பயன்படாதா என்று கேட்கப்படுகிறது. பிரச்னை, தீரவில்லை."

தீட்டுகிறார், டில்லியிலிருக்கும் மெயிலின் தனி நிருபர் 27-ந் தேதி! மேற்குக் கடற்கரையோரம் ஒரு கப்பற்தளம் அமைக்கப்பட வேண்டுமென்று கோரப் பட்டு வருகிறது—நீண்ட நாட்களாக. அத்தளமும் இங்கே, அமையாது வடக்கேயே நிறுவப்படும் என்று தெரிகிறது! இதற்கும் கூறப்படும் காரணம் —கப்பல்தளம் அமைக்கப்படுவதற்கான இரும்பு, வடக்கே வங்காளம், பிகாரிலிருந்தன்றோ வரவேண்டி யிருக்கிறது, என்பதுதான். ஏனெனில், அங்கு தானே இரும்பாலைகள் உள்ளன!

இரும்பாலைகள், வைக்கவும் மறுப்பு — பிறகு, அது சம்பந்தமான தொழில்களை அமைக்கக் கோரிடின், 'இரும்பாலை இல்லை' என்பதே காரண மாகவும், அமைகிறது.

"ஏனய்யா! ஜப்பானிருக்கிறதே, அங்கு இரும்பா, வெட்டியெடுக்கிறார்கள். கிடையாதே! இருந்தும், பெரிய கப்பல் தளமாக விளங்கும்போது, ஏன் இங்கு மட்டும் செய்யக்கூடாது?" என்று நாம் கேட்டால், எரிச்சல் வருகிறது, ஏக இந்தியாக் களுக்கு. தக்க பதில் தருவதில்லை.

மனமிருந்தால், இந்த விஞ்ஞான காலத்தில் எதற்கும் மார்க்கமுண்டு. மனமில்லையே, வடக்கில்! இருந்தாலன்றோ, தெற்கும் வாழ முடியும்!!

"டில்லி சர்க்கார், எது சரி என்று நினைக் கிறதோ அதையே மாகாண சர்க்கார் செய்யவேண் டும் என்று தூண்டுகிறது. பல வழிகளில் தூண்டி வருவதைப் பார்க்கிறோம். இந்த நிலையில், நமக்கு, 'மானியம்' கொடுத்து உதவி செய்வதாகச் சொல் கிறார்கள். உண்மையிலே அவை மானியங்களல்ல; பிச்சைக்காசு போடுவதுபோலத்தான் உள்ளன!" என்று காஞ்சி நகரசபை படத்திறப்பு விழாவில் பேசிய ஆற்காடு அறிஞர் இராமசாமி அவர்கள் குறிப்பிட்டார். மாகாணங்களின் அதிகாரம் யாவும், மத்திய சர்க்காரின் பிடியில் உள்ளது என்றார்! ஆற் காட்டு இராமசாமி, உலகம் போற்றும் பொருளாதார மேதை; வெளிப்படையாக எதையும் சொல்லும் சூழ்நிலையிலும் அவரில்லை. ஆயினும், உள்ளத்து உணர்ச்சி, அவரையும் மீறி, வார்த்தைகளாக வந் திருக்கிறது.

என்னதான், 'ஐக்கியம்' பேசினாலும், வடக்கு வடக்குதான், தெற்கு தெற்குதான்.

'நாம்' என்றால் ஒரு தனிக் கூட்டம் என்று நினைக்கும் மனநிலை, வடக்கே வளர்ந்தே வருகிறது. சுப்பிரமணியங்கள் எவ்வளவுதான் பூசிமெழுக முயன் றாலும், டில்லி வஞ்சகத்துடன்தான் இருந்து வரு கிறது! நமக்கு ஒன்று என்றால், அவ்வளவு கவலை யிருப்பதில்லை, வடக்கே உள்ளவர்களுக்கு!!

★

# விபரீதமான சிபாரிசு

தேசத்தின் பல்வேறு வகைப்பட்ட உற்பத்திப் பொருள்களை சாத்தியப்பட்ட அளவு, அவைகள் தேவைப்படுகிறவெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அன்னியச் செலாவணி விருத்திக்கு வகை காணவும், அதன்மூலம் நாட்டின் தொழில், வர்த்தகம் ஆகிய துறைகளைச் செழிப்பாக்கி வைக்கவும் ஆனமுயற்சிகளுக்கு தக்க வழி துறைகள் கண்டு ஆலோசனைகள் சொல்ல இந்திய யூனியன் அரசாங்கம் சென்ற பிப்ரவரி மாதக் கடைசியில் ஏற்றுமதி அபிவிருத்திக் கமிட்டி என்ற ஒரு அமைப்பை நிறுவியது.

இந்தக் கமிட்டியில் வி. எல். டி. சௌஸா(தலைவர்), டி. ஸி. கபூர் கரம்சந்த் தேபர், ஜி. பி. கோடக், ஆர். எம். காந்தி, நாஜிர் ஹுசேன், செஞ்சல் ராவ், ஆர். வெங்கடேசுவரன ஆகிய தொழில், வர்த்தகப் பிரமுகர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

கமிட்டியினர் இந்த மாதம் முதல் வாரத்தில் கூடி, தேசத்தின் ஏற்றுமதித் துறைகள் குறித்து தீர்க்கமாக ஆலோசித்துச் சில முடிவுகள் செய்து அவைகளை அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்துள்ளார்கள். கமிட்டியின் அறிக்கையில் கண்டுள்ள சிபாரிசுகள் அனைத்தைப் பற்றியும் இங்கு விவாதிக்க — விமர்சிக்க நாம் இஷ்டப்படவில்லை. ஆனால் அந்தக் கமிட்டி ஜவுளித்தொழில் துறையில் கண்டுள்ள முடிவின் மீது செய்துள்ள சிபாரிசை மட்டும் நாம் இங்கு விவாதித்துத் தீர வேண்டியேற்பட்டுள்ளது.

கமிட்டி தனது சிபாரிசில் கூறுகிறது:—

**“ஏற்றுமதிக்கான துணி ரகங்களை நெய்ய யந்திர விசைத்தறிகள் தாராளமாக அனுமதிக்கப்பட வேண்டும். லுங்கிகள் போன்ற துணிகளை கைத்தறிகளில் மட்டும் நெய்ய ஒதுக்கியிருப்பது கூடாது. ஏற்றுமதிக்காக மட்டும் அந்த ரகத் துணிகளை நெய்ய நெசவு மில்களையும் அனுமதிக்கவேண்டும்”** என்று.

இக்கோரிக்கையை அரசாங்கத்திற்கு ஏற்றுமதி அபிவிருத்திக் கமிட்டி சிபாரிசு செய்திருப்பதன் மூலம், நமக்குத் தெளிவாக ஏற்படுகிற சந்தேகம் என்னவென்றால் கமிட்டியில் உள்ளவர்களுக்கு லுங்கி ஜவுளி சம்பந்தமாகப் போதுமான ‘ஞானம்’ இல்லையோ யென்பதுதான்.

நம் நாட்டில் சென்னை, செங்கற்பட்டு, தென்னாற்காடு, வடாற்காடு ஜில்லாக்களில் உள்ள கைத்தறிகளில் சுமார் 20-ஆயிரம் தறிகள் வரை கட்டம்போட்ட துணிகள், லுங்கி, சாரம், சென்னைக் கைக்குட்டை (இதுவும் கட்டம்போட்ட ரகம்தான்) போன்ற ரகங்களை நீண்ட நெடுங்காலமாகத் தயாரித்து வருகின்றன. இந்த ரகங்கள் அனைத்தும் நம் நாட்டிலேயே செலவாவதில்லை. இவைகளில் கிட்டத்தட்ட 90-சதவிகித உற்பத்தி வெளிநாடுகளுக்குத்தான் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. கிழக்காசிய நாடுகள், அரபு நாடுகள், தென்னாப்பிரிக்கா போன்ற பகுதி மக்களின் உபயோகத்திற்கான ரகங்கள்தான் இவைகள்.

பர்மா, மலேயா, சிலோன் தேச மக்களின் நாகரிகத்திற்கு ஏற்ற மேற்கண்ட ஆடை ரகங்களை நெய்து பன்னெடுங்காலமாக நம் ராஜ்ய கைத்தறிகள் அனுப்பி வருகின்றன. அதேபோல சென்னை கைக்குட்டை என்கின்ற பட்டிமார் ரகமும் இங்கு தயாராகி தென் ஆப்பிரிக்காவுக்கு ஏற்றுமதியாகின்றது. இதல்லாமல் பாகிஸ்தான், ஏடன், ஈரான், ஈராக் போன்ற நாடுகளில் உள்ள மக்களின் நாகரீகத்திற்கேற்ப ஆடை வகைகளும் நம் ராஜ்யத்தில் கைத்தறிகளில் தயாராகி ஏற்றுமதியாகின்றன.

இந்த நாடுகளில் உள்ள மக்களை நம்பி கைத்தறிகளில் தயாராகின்ற மேற்குறிப்பிட்ட ரகங்கள் சில சந்தர்ப்பங்களில் அந்தந்த நாடுகள் அனுஷ்டிக்கும் இறக்குமதிக் கொள்கைகளின் விளைவாக இங்கிருந்து ஏற்றுமதியாகாமல் தேக்கமுற்று இத்துறையை மட்டும் நம்பி இயங்கும் கைத்தறிப் பகுதியை சொல்லொண்ணுநெருக்கடிகளுக்கு ஆளாக்கி விடுவதும் உண்டு. சென்ற வருடக் கடைசியிலும், இந்த ஆண்டுத் துவக்கத்திலும்கூட சென்னை கைக்குட்டைகள், சிலரக லுங்கிகள் ஏற்றுமதியாகாமல் தேங்கிவிட்டதன் காரணமாக ஏற்பட்ட நெருக்கடியைச் சமாளிக்க இந்திய அரசாங்கம் தேங்கிய ஜவுளிகளை கொள்முதல் செய்து தற்காலீகமாக நெருக்கடியைச் சமாளிக்கவேண்டி ஏற்பட்டது. இந்த நாடறிந்த உண்மையைக் கமிட்டியினர் தங்களின் அரிய ஆலோசனையை சிபாரிசாக உருவாக்கும் முன் கவனிக்காது விட்டிருக்கின்றனர் என்றே எண்ண வேண்டியிருக்கிறது.

லுங்கித் தொழிலில் அடிக்கடி ஏற்படுகிற இந்தத் தலைவலியைத் தீர்த்து, முறையாகக் கைத்தறி லுங்கிகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட கமிட்டி ஆலோசனை கூறியிருந்தால் வர

> “பல தன்மை வாய்ந்த பல நண்பர்களின் தொடர்பை விடப் பொறுக்கி எடுத்த சில புத்தகங்களின் உறவு அதிக நன்மை அளிக்கும்.” —கால்டன்

வேற்கலாம். அதற்குப் பதிலாக ஏற்கனவேயே இந்திய லுங்கி ரகங்களை இறக்குமதி செய்து கொண்டிருந்த நாடுகளின் இறக்குமதிக் கொள்கைகளின் தாக்குதல்களுக்குப் பலியாகி குற்றுயிரும் குலையுயிருமாய் இருந்து வரும் கைத்தறி லுங்கித் தொழிலை மண்மூடச் செய்து அந்தச் சமாதி மீது நின்று ஆலை நெசவுக்கு ஆதரவு காட்ட வேண்டுமென்ற சிபாரிசை நம்மால் எப்படி ஆதரிக்க முடியும்?

இந்தச் சிபாரிசை நேரிடையாக லுங்கித் தொழிலுடன் பொருத்திப் பார்த்தால் மட்டும்போதாது. இதன் உள்ளே ஒளிந்துகொண்டிருக்கும் நயவஞ்சகக் கொள்கையையும் அம்பலத்திற்கிழுத்தாக வேண்டியிருக்கிறது.

இந்திய ஆலை நெசவுத்துறை படிப்படியாக உலக மார்க்கெட்டுகளில் தனது ஏற்றுமதிகுறைந்து வருவதைப் பார்க்கிறது, ஐரோப்பிய நாடுகளில் இந்திய ஆலை ஜவுளி புகுந்து அந்நாடுகளின் ஆலை ஜவுளிகளோடு போட்டியிட ஆரம்பித்ததன் விளைவாக அந்த நாடுகளின் ஜவுளி ஆலை அதிபர்கள் தங்களின் பலத்தை ஒருமுகப்படுத்தி எதிர்ப்புக்காட்டத் தலைப்பட்டனர். இதன் காரணமாகத் தங்களின் ஏற்றுமதி குறைந்து வருவதைப் பார்க்கும் இந்திய ஆலை அதிபர்கள், எதிர்ப்பில்லாத வேறு நாடுகளுக்கான ரகங்களைத் தங்களது ஆலைகளில் உற்பத்தி செய்து அனுப்பி தொடர்ந்து தங்களின் ஏற்றுமதித் துறையை நிலைநிறுத்த எண்ணுகின்றனர். இந்த முடிவுக்கு இந்திய ஆலை நெசவுப் பிரிவு வருவது தவிர்க்க முடியாததுதான் என்றாலும், அதற்காக கைத்தறித் துறையை அழுத்தி விட்டு அதன் மீது தனது ஏற்றுமதி வர்த்தகத்தை இழக்காமல் பார்த்துக்கொள்ள எண்ணுகிற சுயநலப் போட்டியைத்தான் நாம் வன்மையாக எதிர்க்கிறோம்,

யதார்த்தமான இந்த நிலையை ஆதாரமாக வைத்துப்பார்த்தால் தான் லுங்கி ரக நெசவை கைத்தறித் துறைக்கு ஒதுக்கியுள்ள ரகக் கட்டுப்பாடு நீக்கப்பட்டு அவைகள் ஆலைகளில் நெய்யவும் ஏற்றுமதி செய்யப்படவும் ஆன அனுமதி வழங்கப்பட வேண்டுமென்ற ஏற்றுமதி அபிவிருத்திக் கமிட்டியின் சிபாரிசில் உள்ள அந்தரங்கம் புலனாகும்.

லுங்கி ஜவுளி வெளிநாட்டு ஏற்றுமதியினால் இந்தியா அடைகிற எந்த நன்மையும் கைத்தறித் துறையின் மூலம் கிடைத்தால் அது தப்பா? அந்த நன்மை ஆலை நெசவு மூலம் கிடைக்க வேண்டுமென்பதற்கான அவசியம் என்ன இப்போது ஏற்பட்டுவிட்டது? ஏற்றுமதி அபிவிருத்திக் கமிட்டியானது இன்று வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிக்கொண்டிருக்கும் லுங்கி ஜவுளியை மேலும் அதிகமாக்கவும், அதற்கான ஏற்கனவேயே இருந்து வரும் உள்நாட்டு உற்பத்தித் துறையில் செய்ய வேண்டிய மாறுதல்கள் குறித்தும் தக்க ஆலோசனைகள் கூறியிருந்தால் நாம் அவைகளைப்பற்றி யோசிக்கவோ, ஏற்றுக்கொள்ளவோ செய்யலாம். அதற்குப் பதிலாக இருக்கும் ஏற்பாட்டிற்கு மூடுவிழா செய்து. ஆலை நெசவுக்கு லுங்கி ஜவுளி நெசவை ஒதுக்கித்தர வேண்டுமெனக் கோருவதை—சிபாரிசு செய்வதை எப்படி ஒப்புக்கொள்வது?

கைத்தறிகளில் தயாரிக்கப்படுகிற லுங்கித் துணிகள் தரம் குறைந்துவிட்டதா? அல்லது அவைகள் வெளிநாடுகளில் செலாவணி ஆகாப் பொருள்களாக போய்விட்டனவா? இல்லை; வெளிநாட்டு மக்கள் இந்தியக் கைத்தறி லுங்கிகளை வெறுத்து ஒதுக்க ஆரம்பித்து, மார்க்கெட்டை இழந்துவிட வேண்டிய அவசியத்திற்கு நிலைமை மாறிவிட்டதா? ஏதாவது குற்றச்சாட்டு வேண்டுமல்லவா?

இந்திய கைத்தறிகளில் தயாரிக்கப்படுகிற லுங்கி துணிகள், உலக நாகரீகத்தில் மிகவும் முன்னுக்கு வந்துள்ள அமெரிக்கர்களாலேயே அதனின் தரத்தை—நெசவைப்போற்றி வாங்கப்படுகிறபோது ஏன் அத்தொழிலை அழித்தொழிக்க அரசாங்கத்திற்கு கமிட்டி சிபாரிசு செய்யவேண்டுமோ தெரியவில்லை. எந்தவிதக் காரணமும், குற்றச்சாட்டுகளுமின்றி நடைபெற்று வருகிற லுங்கித் துணி உற்பத்தித் துறையில் மாற்றம் காணவேண்டிய அவசியம் கமிட்டிக்கு ஏற்பட்ட காரணம் இந்திய நெசவாலை அதிபர்களின் பிடிப்பு கையோங்கியிருக்கலாமோ என்ற சந்தேகத்தைத்தான் நமக்கும், கைத்தறித் துறையினருக்கும் உண்டாக்கியிருக்கிறது.

ஆகவே, கமிட்டி லுங்கி ஜவுளி ஏற்றுமதி சம்பந்தமாகச் செய்துள்ள சிபாரிசை அரசாங்கம் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளக் கூடாதென நாம் வற்புறுத்துகிறோம். இந்தச் சிபாரிசை ஏற்பதால் எழுகிற அழிவை அரசாங்கம் மனதில் கொள்ளுமாறு செய்ய அகில இந்திரா கைத்தறி போர்டு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நாம் கோருவதோடு, சென்னை மாகாண கைத்தறி ஜவுளி வர்த்தகர்கள் சங்கமும் இப்பிரச்சனையில் தனது வன்மையான ஆட்சேபணையை சம்பந்தப்பட்ட இலாகா அமைச்சருக்கும் அதிகாரிகளுக்கும் உடனடியாகத் தெரியப்படுத்த வேணுமாய் வற்புறுத்துகிறோம்.

"கைத்தறி"

★

## காஞ்சியில் படத்திறப்பு விழா

—o—

காஞ்சிபுரம் நகராட்சி மன்றத்தின் முன்னாள் உபதலைவர் திரு. எம். பொன்னுசாமி (முதலியார்) அவர்களின் திரு உருவப்படத்தை 24—11—57 அன்று ஆர்க்காடு சர். ஏ. இராமசாமி அவர்கள் திறந்துவைத்து, திரு. பொன்னுசாமி அவர்களின் சேவைகளைப் பாராட்டியும், மத்திய சர்க்காரில் அதிகமாக அதிகாரங்கள் குவிக்கப்பட்டிருப்பதை கண்டித்தும் அரியதோர் சொற்பொழிவாற்றினார். இறுதியில் சி.என். அண்ணாதுரை திரு.பொன்னுசாமி அவர்களைப் பாராட்டி, அவரின் திருவுருவப்படம் நகராட்சி மன்றத்தில் இருப்பது, எதிர்கால இளைஞர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்கும் என்பதை விளக்கினார். நகர மன்றத் தலைவர் வி. என். பெருமாள் தலைமை தாங்கினார். நகர மன்றத்தின் உபதலைவர் திரு. அ. க. தங்கவேலர் அவர்கள் நன்றி நவில, தேனீர் விருந்துடன் விழா இனிது முடிவுற்றது.

வருகிறது! வருகிறது!

# விரைவில் வெண்திரையில் வருகிறது!

## கதை வசனம்: பிரதம மந்திரி

## டைரக்ஷன்: பிரதம மந்திரி

இப்படியொரு விளம்பரம் விரைவில் வரவிருக்கிறது!

நாடு முழுவதும், இதுபோன்ற சுவரொட்டிகள், ஒட்டப்படக் கூடும்!!

ஏனெனில், பிரதம மந்திரியார், பேசும் படம் ஒன்றுக்கு கதை வசனம் எழுதுகிறார்.

"என்ன! என்ன? ஒரு நாட்டின் பிரதமரா, சினிமாக் கட்சியில் சேர்ந்துவிட்டார். ஐயகோ! அடுக்குமா? ஆகுமா!!," என்று ஒருசிலர், இங்கு ஓலமிடக்கூடும்.

உண்மை தோழர்களே, கதை வசனம் எழுதுவதோடு மட்டுமல்ல, டைரக்ஷனும் அவரே செய்யவிருக்கிறார்.

"கெட்டுவிட்டது உலகம்! கேடு கெட்டுவிட்டது. நாட்டையாளும் பிரதமர் நாடகமாடிகளோடு சேருவதா? அதுதான் போகட்டுமென்றால், சினிமா உலகத்துடனும் தொடர்பு கொள்வதா! அதுவும் போனால் போகட்டும் என்றால், இவரே, கதையும் வசனமும் எழுதி டைரக்ஷனும் செய்வதா"? என்று, ஆர்ப்பரிக்கக்கூடும் இங்குள்ள நண்பர்கள்.

செய்தியினை, சிங்கப்பூர் தமிழ் ஏடாம், "தமிழ் முரசு" தருகிறது.

அண்மையில் சுதந்திரம் பெற்ற மலேயா நாட்டுக்குப் பிரதமராக விளங்குகிறாரே துங்கு அப்துல் ரஹிமான்; அவர்தான், இந்தக் காரியத்தைச் செய்யவிருக்கிறார்.

அவர் எழுதிய "மசூரி" எனும் நாடகத்தை, சிங்கப்பூரிலுள்ள கத்தே எனும் ஸ்டுடியோவினர், திரைப்படமாக்க முடிவு செய்துள்ளனர்.

இதையொட்டி மேற்படி கம்பெனியின் உரிமையாளர் லோக்வான் என்பவர், துங்குவைப் பேட்டி கண்டபோது, மேற்படி நாடகத்தைத் திரைப்படமாக்குமுன் இதன் சில பகுதிகளைத் தாம் திருத்த வேண்டியிருக்குமென்று சொன்னாராம். அதோடு, தானே இந்தப் படத்தில் டைரக்டராக இருக்க விரும்புவதாகவும் தெரிவித்தாராம். இதுமட்டுமின்றி, ஆடையலங்காரம் பற்றியும் தானே ஆலோசகராக இருக்கவிரும்புவதாகத் துங்கு, தெரிவித்தாராம்.

"மசூரி" என்கிற நாடகத்தின் கதைச் சுருக்கம் என்ன தெரியுமா? மலேயாவில் ஓரிடத்தில் இருந்தானும், ஒரு இளவரசன்! அவன் மிகக் கொடுங்கோலனும்!! அந்தக் கொடுங்கோலனைச் சுற்றியே ஓடுமாம் இக் கதை. ஒரு காலத்தில் லங்காவித் தீவில் நடைபெற்ற சம்பவமே, கதையின் அடிப்படையாம்.

இந்தத்திரைப்படம், பழம் காலத்துப் பழக்க வழக்கங்களையும், உடுப்புக்களையும் அப்படியே காட்டும் வகையில் அமையவேண்டும் என்று துங்கு ஆசைப்படுகிறாராம். வேறு யார் கையிலாவது, கதையைக்கொடுத்தால், தான் விரும்பியபடி இல்லாது, அனைத்தும் மோசமாகிவிடக் கூடுமென்கிற அச்சத்தால், திரைப்பட சம்பந்தமான முக்கிய பொறுப்புகளையும் ஏற்க முன் வந்திருக்கிறார்.

இந்தச் செய்தி, செயல்படுமானால், கலையுலகில் ஒரு புதுமையைச் செய்தவராவார், துங்கு.

★